Crl.Misc.39

DEPOSITION OF WITNESS

( Chapter XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, THIRUKALUKUNDRAM.

Case No. CC.48/2024

**P.W**.1 (LW1)

| | |
|---|---|
| Name | : **திரு.வெங்கடேசன்** |
| Father/Husband Name | : திரு, ரங்கன் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

எதிரி ஆஜரில் உள்ளார்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.06.2026

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது மாதுலங்குப்பம் கிராமத்தில் குடியிருந்து கொத்தனார் வேலை செய்து வருகிறேன்.

2) கடந்த 04.02.2024 ம் தேதி மாலை 5 மணியளவில் எனது மாமா மூர்த்தி என்பவரின் இறுதி சடங்கில் கலந்து கொள்வதற்காக மாலை வாங்கிக் கொண்டு ஆஜர் எதிரி பிரபாகரன் என்பவரின் வீட்டின் எதிரே வந்துக் கொண்டிருந்த போது என்னை பார்த்து அசிங்கமாக பேசினார். நான் அதை கண்டுக் கொள்ளாமல் சென்றபோது அவர் என்னை வழிமறித்து என்னை கையால் அடித்தார். அதன் பின்னர் அவர் கையில் வைத்திருந்த கத்தியை எடுத்து இடது புற காதில் வெட்டினார். எனக்கு ரத்தம் அதிகமாக வந்தது. அருகில் இருந்தவர்கள் வருவதை பார்த்து எதிரி அங்கிருந்து ஓடிவிட்டார். அதன் பிறகு நான் காயத்திற்காக திருக்கழுக்குன்றம் அரசு

மருத்துவமனைக்கு சென்று முதல் உதவி சிகிச்சை பெற்றேன். அதன் பிறகு மறுநாள் 05.02.2024 அன்று காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்த புகா்ர ஆகும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** அந்த புகாரை நான் சொல்ல சொல்ல என் நண்பர் எழுதினார். அதை அவர் என்னிடம் படித்து காண்பித்தார். என்னிடம் காட்டப்படும் பேனா கத்தி எதிரி என்னை தாக்க பயன்படுத்தியதாகும். **(பேனாகத்தி அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

சம்பவம் நடந்த மறுநாள் நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகாரில் தேதி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த போது எங்கள் தெருவில் பொது மக்கள் சுமார் 40 முதல் 50 பேர் வரை இருந்திருப்பார்கள் என்றால் சரிதான். நான் கொடுத்த புகார் சம்மந்தமாக போலிசார் என் வீட்டின் அருகே வந்து 5 நாட்கள் கழித்து விசாரணை செய்தார்கள். திருக்கழுக்குன்றம் அரசு மருத்துவமனையிலிருந்து திருக்கழுக்குன்றம் காவல் நிலையம் சுமார் 100 மீட்டர் தூரம் தான் இருக்கும் என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரில் பொது மக்கள் எத்தனை பேர் வேடிக்கை பார்த்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். என் ஊரிலிருந்து காவல் நிலையம் சுமார் 2 கி.மீ. தூரம் இருக்கும். மருத்துவமனைக்கு நானும் என் மனைவியும் சென்றோம். போலிசார் என்னை விசாரணை செய்தபோது நானும் என் மனைவியும் மருத்துவமனைக்கு சென்றோம் என்ற விவரத்தை சொல்லியுள்ளேனா

என்றால் சொல்லியுள்ளேன். மருத்துவமனையில் நான் சிகிச்சை பெற்றதற்கான ஆவணங்களை போலிசாரிடம் நான் ஒப்படைத்தேன். நான் சொன்ன தேதி, சொன்ன நேரத்தில், சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், இறுதி சடங்கில் பொது மக்களின் நெரிச்சலில் தள்ளு முள்ளு ஏற்பட்டு நான் கீழே விழுந்து அங்கிருந்த தகடு என் காதில் பட்டு ரத்த காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.

(Sd)S.Vineeth
J.M./TKM.

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. CC.48/2024

**P.W**.2 (LW2)

| | |
|---|---|
| Name | : **திரு.முருகேசன்** |
| Father/Husband Name | : திரு, ரங்கநாதன் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

எதிரி ஆஜரில் உள்ளார்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.06.2026

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது மாதுலங்குப்பம் கிராமத்தில் குடியிருந்து கொத்தனார் வேலை செய்து வருகிறேன். சாட்சி வெங்கடேசன் என்னுடைய ஊரை சேர்ந்தவர்.

2) கடந்த 04.02.2024 ம் தேதி மாலை 5 மணியளவில் அதே ஊரை சேர்ந்த மூர்த்தி என்பவரின் இறுதி சடங்கு நடந்துக் கொண்டிருந்தது. அப்போது நான் அங்கிருந்தேன். அந்த இறுதி சடங்கில் கலந்துக் கொள்வதற்காக மாலை வாங்கிக் கொண்டு வெங்கடேசன் வந்துக் கொண்டிருந்த போது ஆஜர் எதிரி பிரபாகரன் என்பவரின் வீட்டின் எதிரே வந்துக் கொண்டிருந்த போது அங்கே சத்தம் கேட்டது. சத்தம் கேட்டு நானும் பாஸ்கர் என்பவரும் அந்த சண்டையை மடக்க சென்றோம். என்னுடன் சேர்ந்து ஊர்காரர்களும் சண்டையை தடுக்க வந்தார்கள். அந்த கூட்டத்தில் காதை அறுத்துவிட்டார்கள் என்று சத்தம் கேட்டது. அந்த

சம்பவத்தில் வெங்கடேசனுக்கு இடது காதில் ரத்த காயம் ஏற்பட்டிருந்தது. அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். இது சம்மந்தமாக வெங்கடேசன் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார். சம்பவம் குறித்து போலிசார் விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

சம்பவம் நடந்த போது சுமார் 30 முதல் 40 பேர் கும்பலாக இருந்தார்கள் என்றால் சரிதான். சம்பவத்தை 10 முதல் 20 பேர் வரை தடுக்க சென்றோம். சம்பவம் கேட்டு தான் நான் சென்று பார்த்தேன் என்றாலும் நேரடியாக எனக்கு தெரியாது என்றாலும் சரிதான். வழக்கு சம்மந்தாக போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.

(Sd)S.Vineeth
J.M./TKM.

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. CC.48/2024

**P.W**.3 (LW3)

| | |
|---|---|
| Name | : **திரு.பாஸ்கரன்** |
| Father/Husband Name | : திரு, வேதாச்சலம் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

எதிரி ஆஜரில் உள்ளார்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.06.2026

**முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது மாதுலங்குப்பம் கிராமத்தில் குடியிருந்து கொத்தனார் வேலை செய்து வருகிறேன். சாட்சி வெங்கடேசன் என்னுடைய ஊரை சேர்ந்தவர்.**

**2) சுமார் 2 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மாலை 5 மணியளவில் அதே ஊரை சேர்ந்த மூர்த்தி என்பவரின் இறுதி சடங்கு நடந்துக் கொண்டிருந்தது. அப்போது நான் அங்கிருந்தேன். அந்த இறுதி சடங்கில் கலந்துக் கொள்வதற்காக மாலை வாங்கிக் கொண்டு வெங்கடேசன் வந்துக் கொண்டிருந்த போது ஆஜர் எதிரி பிரபாகரன் என்பவரின் வீட்டின் எதிரே வந்துக் கொண்டிருந்த போது வெங்கடேசனுக்கும் பிரபாகரனுக்கும் தகராறு ஏற்பட்டு சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள். நானும் ஊர்காரர்களும் சண்டையை மடக்குவதற்காக சென்றோம். சண்டையில் வெங்கடேசனுக்கு காதில் காயம் ஏற்பட்டது. எப்படி காயம் ஏற்பட்டது**

என்று எனக்கு தெரியாது. சம்பவம் குறித்து போலிசார் விசாரணை செய்யவில்லை.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

சாட்சிகள் வெங்கடேசன், முருகேசன் ஆகியோர் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். ஆஜர் எதிரி பிரபாகரனும் எங்கள் ஊரை சேர்ந்தவர் என்றால் சரிதான். சம்பவத்தை 10 முதல் 20 பேர் வரை தடுக்க சென்றோம். சம்பவம் கேட்டு தான் நான் சென்று பார்த்தேன் என்றாலும் நேரடியாக எனக்கு தெரியாது என்றாலும் சரிதான். வழக்கு சம்மந்தாக போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.

(Sd)S.Vineeth
J.M./TKM.